# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 73

**2 மதிப்பெண் வினாக்கள்**

12 x 2 = 24

1) தற்போதைய உலகில் அடிப்படைத் தேவைகள் யாவை?

**பதில் :** உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய உலகில் அந்தப் பட்டியலில் வேலைவாய்ப்பு என்ற ஒன்றையும் சேர்க்கப்பட வேண்டியது முக்கியம். இவ்வுலகில் வாழ்வதற்காக வருவாய் ஈட்ட நம் அனைவருக்கும் வேலை அவசியம்.

2) உழைப்பாளர் குழு - வரையறு.

**பதில் :** உழைப்பாளர் குழு என்பது நாட்டு மக்களில் வேலையில் இருப்போரும், கூடவே வேலை செய்யும் திறன் பெற்ற நபர்களும் ஆவர்.

3) முதன்மை துறையின் அங்கங்கள் யாவை?

**பதில் :** முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறையின் அங்கங்கள், அடிப்படை உற்பத்தி, விவசாயம், காடுகள், சுரங்கம், கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் பண்ணை போன்றவைகளாகும்.

4) இரண்டாம் துறையின் அங்கங்கள் யாவை?

**பதில் :** இரண்டாம் துறையின் அங்கங்கள் தொழிற்சாலைகள் உற்பத்தி பொருட்கள், சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள், கட்டுமானம் போன்றவை ஆகும்.

5) சார்புத் துறையின் அங்கங்கள் யாவை?

**பதில் :** சார்புத் துறை அல்லது சேவைத் துறையின் அங்கங்கள் போக்குவரத்து, காப்பீடு, வங்கி, C வணிகம், தொலைத்தொடர்பு, வீட்டுமனை விற்பனை, அரசு மற்றும் அரசு சாரா சேவைகள் போன்றவை ஆகும்.

6) ஒழுங்கமைக்கப்படாத துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் யாவை?

**பதில் :** ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் அதற்கென விதிகளும், ஒழுங்கு முறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இவற்றில் வேலை செய்வோர்க்குக் குறைந்த கூலி கொடுக்கப்படுவதோடு பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறை நாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இல்லை. வேலை உத்திரவாதம் கிடையாது.

7) **செயல்பாடு:**

தஞ்சாவூர் அருகேயுள்ள வல்லம் கிராமத்தில் கோவிந்தன் வசிக்கிறார். அவருக்கு சுப்பையா, குமரன் என இரண்டு மகன்கள் உள்ளனர். அவருக்குச் சொந்தமாக மூன்று ஏக்கர்கள் நிலமும் ஒரு மாட்டுவண்டியும் இருக்கிறது. தங்களின் நிலத்தில் அவர்கள் நெல்லும் வேர்க்கடலையும் பயிரிடுகின்றனர். சுப்பையா விவசாய வேலைகளில் அவரது தந்தைக்கு உதவி செய்கிறார். இன்னொரு மகனான குமரன், காப்பீட்டு நிறுவனம் ஒன்றில் வளர்ச்சி அலுவலராக இருக்கிறார். இவர்களின் தாய் கமலா அதே கிராமத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்க்கிறார். கோவிந்தனின் அடுத்த வீட்டுக்காரரான கோபாலின் மகன் பாண்டியன், சென்னையில் சிட்கோ தொழிற்பேட்டையில் பணிபுரிகிறார்.

1. கோவிந்தன் குடும்பத்தில் சேவைத்துறையில் வேலை செய்வோர் எத்தனை பேர்? அவர்களின் பெயர்களை எழுதுக.
2. சுப்பையாவும் அவரது தந்தையும் எந்த துறையில் வேலை செய்கின்றனர்?
3. பாண்டியன் ஒரு முதன்மைத் துறையில் வேலை செய்கிறாரா?

**பதில் :** 1. **இரண்டு நபர்கள்:**

i. கமலா (கோவிந்தனின் மனைவி)

ii. குமரன் (கோவிந்தனின் மகன்)

2. முதன்மைத் துறை.

3. இல்லை - இரண்டாம் துறை

8) மாணவர்களுக்கான கல்விகடன் வழங்குவது பற்றி ஏதேனும் இரண்டு கூறு.

**பதில் :** உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ மேற்படிப்பை தொடர் முனைவோருக்கு வழங்கப்படுகின்றன. முழு நேர மற்றும் பகுதி நேர பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு அல்லது தொழில் படிப்புகளுக்காக வழங்கப்படுகின்றன.

9) பண விநியோகத்திற்கான நான்கு பிரிவுகளைப் பற்றி கூறு.

**பதில் :** $ப_1$ - மக்களின் புழக்கத்திலுள்ள பணம் மற்றும் நாணயங்கள் + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை ரிசர்வ் வங்கி வைப்புத் தொகை.

$ப_2$ - $ப_1$ + அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ள தொகை

$ப_3$ - $ப_2$ + அனைத்து வணிக கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள காலவைப்புத் தொகை.$ப_4$ - $ப_3$ + அஞ்சல் அலுவலகங்களின் மொத்த வைப்புத் தொகை.

10) சுய உதவிக்குழுக்கள் என்றால் என்ன?

**பதில் :** குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்பவர்கள் அல்லது குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடுபவர்கள் குழுவாக அமைத்து சிறு சேமிப்பில் ஈடுபடுகின்றனர். இவர்கள் சுய உதவு குழுக்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

11) ATM பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** தானியங்கி பணம் வழங்கும் அட்டையின் (ATM) மூலம் ஒருவர் எந்த நேரத்திலும் தனது வங்கி கணக்கில் இருக்கும் பணத்தினை எடுக்கலாம்.

12) வங்கிகளில் சேமிக்கப்படும் தொகை எதற்காக பெரும் பங்கு பயன்படுகிறது.

**பதில் :** வங்கிகளில் சேமிக்கும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும். பொருளியல் வளர்ச்சிக்கும், ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகின்றன

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u> 8 x 3 = 24

13) பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்றால் என்ன?

**பதில் :** 1. பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்பது நாட்டு மக்களில் வேலையில் இருப்போரும், கூடவே வேலை செய்யும் திறன் பெற்ற நபர்களும் ஆவர்.

2. உழைப்பாளர் குழுவைக் கணக்கிடுவதில் 15 முதல் 60 வயது வரையிலும் உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

14) குழந்தைகளையும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களையும் ஏன் பணிக் குழுக்களாக கருதக்கூடாது?

**பதில் :** 1. 15 வயதிற்குக் குறைந்தவர்கள் குழந்தைகளாகவும், 60 வயதைக் கடந்தவர்கள் முதியவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

2. குழந்தைகளும், முதியவர்களும் உற்பத்தி சார்ந்த வேலையை மேற்கொள்வதற்கு உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் அல்ல என்பதால் அவர்கள் உடல் உழைப்பைச் செய்ய முடியாது என விலக்கப்படுகின்றனர்.

15) பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?

**பதில் :** பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள்:

1. முதன்மைத் துறை,
2. இரண்டாம் துறை,
3. சார்புத்துறை ஆகியன.

16) தற்போது மூன்றாம் துறை உலகத்தில் முதலிடத்தில் உள்ளது. காரணம் கூறுக.

**பதில் :** 1. மூன்றாம் துறை என்பது சேவைகள் சம்பந்தப்பட்ட துறையாகும்.

2. இது மற்ற துறைகளின் அடிப்படை உற்பத்தியை கட்டுப்படுத்துகிறது.

3. முன்னேறிவரும் நாடுகளில் இது முக்கியப் பங்காற்றுகிறது. எனவே மூன்றாம் துறை தற்போது உலகத்தில் முதலிடத்தில் உள்ளது.

17) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடுமையான சரிவு ஏற்பட்டாலும், தமிழ் நாட்டில் தொடர்ந்து விவசாயத்தில் அதிகமாக ஈடுபடுவதன் காரணத்தை கூறுக?

**பதில் :** 1. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் தமிழகத்தில் விவசாயமே அதிகம் பேருக்கு வேலையளித்துக் கொண்டிருக்கிறது.
2. இதற்குக் காரணம் விவசாயமல்லாத துறைகள், உழைப்பாளர் குழு தொழில்களை மாற்றிக் கொள்வதற்குப் போதுமான அளவு வேலை வாய்ப்பை உருவாக்கவில்லை.
3. தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு வளர்ச்சியின் பெரும்பகுதி, குறைந்த வருமானங்களை அளிக்கின்ற அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்படாத முறைசாரா துறைகளின் பங்களிப்பாகவே உள்ளது.

18) முதன்மைத்துறை சார்ந்த தொழில்கள் யாவை?

**பதில் :** 1. விவசாயம்
2. கால்நடை வளர்ப்பு
3. பால் பண்ணை
4. கோழி வளர்ப்பு
5. மீன் வளர்ப்பு
6. காடுகள்

19) சார்புத்துறைத் தொழில்கள் யாவை?

**பதில் :** 1. போக்குவரத்து
2. வணிகம்
3. அரசு மற்றும் அரசு சாரா
4. சேவைகள்
5. காப்பீடு
6. தொலைத் தொடர்பு
7. வீட்டுமனை விற்பனை
8. வங்கி

20) ஒழுங்கமைக்கப்பட்ட துறை என்றால் என்ன?

**பதில் :** 1. பதிவு செய்யப்பட்டதும், அரசாங்க விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றுவதும், ஊழியர்களையும் ஊழியர் சங்கங்களையும் கொண்ட துறை ஒழுங்கமைக்கப்பட்ட துறை எனப்படும்.
2. இந்தியாவில் வங்கிகள். காப்பீடு, உற்பத்தித் தொழிற்சாலைகள். மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறைகள் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் என்று கூறலாம்.

## 5 மதிப்பெண் வினாக்கள்

5 x 5 = 25

21) விவரி.
அ) முதன்மைத் துறை
ஆ) இரண்டாம் துறை
இ) சார்புத் துறை

**பதில் :** **மூவகைத் துறைகள்:**
பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை
அ) முதன்மைத்துறை
ஆ) இரண்டாம்துறை
இ) சார்புத்துறை

**முதன்மைத் துறை:**
விவசாயம், காடுகள், கால்நடை வளர்ப்பு. கோழி வளர்ப்பு. பால் பண்ணை. மீன் வளர்ப்பு போன்ற தொழில்கள் இத்துறையில் அடங்கும்.

**இரண்டாம் துறை:**
உற்பத்தி, சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலைகள், கட்டுமானம் போன்றவை இத்துறையில் உள்ளனவாகும்.

**சார்புத் துறை:**
போக்குவரத்து, காப்பீடு, வங்கி, வணிகம். தொலைத்தொடர்பு. வீட்டுமனை விற்பனை, அரசு மற்றும் அரசு சாராச் சேவைகள் ஆகியன சார்புத்துறையினைச் சார்ந்தவைகளாகும்.

22) இந்தியாவில் வேலைவாய்ப்பு அமைப்பைப் பற்றி விளக்குக

**பதில் :** 1. இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மையானது பல பரிணாமங்களைக் கொண்டது. சிலருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு ஓராண்டில் சில மாதங்களுக்கே வேலை கிடைக்கும்.
2. முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறை. இரண்டாம் துறை அல்லது தொழில் துறை, மூன்றாம் துறை - சார்புத் துறை அல்லது சேவைத்துறை என பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
3. பொருளியல் அமைப்பின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு அமைப்பு குறிக்கிறது.
4. வேலைவாய்ப்புப் பாணி நாட்டுக்கு நாடு மாறுபடுகின்ற போதிலும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் உழைப்பாளர் குழு பெரும்பகுதி முதன்மைத் தொழிலிலும் சிறிய குழுக்கள் இரண்டாம். மூன்றாம் நிலைத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.
5. இந்திய வளர்ச்சிக் கொள்கையின் ஒரு முக்கியமான கூறாக வேலைவாய்ப்பு எப்போதுமே இடம் பெற்றுள்ளது.

23) ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்படாத துறைகளில் நிலவுகின்ற வேலைவாய்ப்பை ஒப்பிடுக

**பதில் :**

| ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள் | ஒழுங்கமைக்கப்படாத துறைகள் |
|---|---|
| பதிவு செய்யப்பட்டதும். அரசாங்க விதி களையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்றுவதும். ஊழியர்களையும் ஊழியர் சங்கங்களையும் கொண்டுள்ள துறை ஒழுங்கமைக்கப்பட்ட துறை எனப்படும். | ஒழுங்கமைக்கப்படாத துறைகள் அரசாங்கத்தில் பதிவு பெற்றவைகள் அல்ல. மேலும் இவற்றிற்கு விதிகளும் ஒழுங்கு முறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. |
| வங்கிகள், ரயில்வே. காப்பீடு, உற்பத்தித் தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறைகள் ஒழுங்கமைக்கப்பட்ட துறைகளாகும். | வீட்டு உபயோகப் பொருள்கள் சிறு மற்றும் குடிசைத்தொழில்கள், தெருக்களில் விற்பனை செய்வோர். பழுதுகள் சரி பார்ப்போர் போன்ற சிறிய அளவிலான தொழில் செய்யும் மக்களை இத்துறை உள்ளடக்கியுள்ளது. |
| இந்தத் துறைகள், சட்டத்திலுள்ள குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் படி செயல்படுகின்றன. | இதற்கு விதிகளும், ஒழுங்குமுறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. |
| ஊழியர்களுக்கு பணிப்பாதுகாப்பு உண்டு. | வேலை உத்தரவாதம் கிடையாது. |
| நல்ல ஊதியம், நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம். ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மருத்துவ உதவித்தொகை மற்றும் காப்பீடு போன்றவை வழங்கப்படும். | குறைந்த கூலி, பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு. மருத்துவ விடுப்பு போன்றவை கிடையாது. |

24) பொதுத் துறையையும், தனியார் துறையையும் வேறுபடுத்துக

**பதில் :**

| பொதுத்துறை | தனியார் துறை |
|---|---|
| சேவை நோக்கம் கொண்டது. | இலாப நோக்கம் கொண்டது |
| சொத்துக்கள் அரசாங்கத்திற்குச் சொந்தம் | சொத்துக்கள் தனிநபர்களுக்குச் சொந்தமானது |
| ஊதியம் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது. | ஊதியம் உரிமையாளரால் வழங்கப்படுகிறது. |
| நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், இந்திய உருக்கு ஆணையம், பாரத தொலைபேசி நிறுவனம் போன்றவை பொதுத் துறை நிறுவனங்கள். | டி.வி.எஸ். மோட்டார் நிறுவனம், அசோக் லேலண்ட், டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை போன்றவை தனியார் நிறுவனங்கள். |

25) இருவேல்பட்டுலில் வேலைவாய்ப்பு குறித்த கள ஆய்வினை விவரி.

**பதில் : இருவேல்பட்டுவில் வேலைவாய்ப்பு : ஒரு கள ஆய்வு**

(i) வேலைவாய்ப்பு நிலவரங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேசிய அல்லது மாநில அளவில் மட்டும்தான் புரிந்து கொள்ளமுடியும் என்றில்லை; கிராமத்தை ஆய்வு செய்வதிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். இருவேல்பட்டு என்பது தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும்.

இந்தக் கிராமம் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்த கிராமம் ஸ்லேட்டர் கிராமம் என்றும் கூறப்படும்; ஏனெனில், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர் முதன்முதலில் தனது மாணவர்களுடன் கள ஆய்வு செய்வதற்காக இந்த கிராமத்திற்கு 1916 ஆம் ஆண்டு சென்றார்.

(ii) காலப் போக்கில் பல ஆய்வாளர்கள் கிராமத்தவர்களின் வேலை குறித்து கணக்காய்வு செய்து, கிராமத்திலுள்ள ஒவ்வொருவர் குறித்தும் மேலும் பல விவரங்களைச் சேகரித்துள்ளனர்.

(iii) இந்தக் கிராம வளர்ச்சியின் காரணம் கிராம மக்களிடையே ஆரம்ப சுகாதார நலம், பள்ளிகள் அமைத்தது. பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் மீது சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியது காரணமாகும்.

(iv) இந்தக் கிராமம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ள போதிலும் இன்னமும் அவர்களின் வேலைவாய்ப்புக்கு முக்கியமாக விவசாயத்தையே சார்ந்துள்ளது.

(v) 1981ஆம் ஆண்டில் 100 குடும்பங்களில் 24 குடும்பங்கள் விவசாயமல்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். 2008ஆம் ஆண்டில் விவசாயமல்லாத வேலைகளில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.

(vi) 1981-2008 காலத்தில் விவசாயத்தில் விவசாயக் கூலிகளாகவும், பயிரிடுவோராகவும் ஈடுபட்டிருந்த குடும்பங்களின் விகிதம் குறைந்துள்ளது. எனவே விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடுவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை காணலாம்.

இருவேல்பட்டுவில் இருந்த குடும்பங்களின் வேலை விவரங்கள்(சதவீதத்தில்)

| தொழில் | குடும்பங்கள் % | |
|---|---|---|
| | 1981 | 2008 |
| பயிரிடுவோர் | 42 | 33 |
| விவசாயக் கூலிகள் | 34 | 26 |
| விவசாயமல்லாத தொழிலாளர்கள் | 24 | 41 |
| மொத்த குடும்பங்கள் | 100 | 100 |

